நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**பயறு வகைகள் ஒழுங்குமுறை விற்பனை குறித்து ஆலோசனை**

First Published : 29 Mar 2010 06:08:08 AM IST

மன்னார்குடி,மார்ச் 28: திருவாரூர் மாவட்டத்தில் அறுவடை செய்து தற்போது விற்பனைக்கு வரும் உளுந்துப் பயறு வகைகளை மாவட்டத்தில் உள்ள ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் ஏல முறையில் விற்பனை செய்வது குறித்த ஆலோசனைக் கூட்டம் வெள்ளிக்கிழமை மன்னார்குடியில் நடைபெற்றது.

மாநில வேளாண்மை விற்பனை வாரியத் தலைவர் கே.பி.டி. கணேசன் தலைமை வகித்தார்.

திருவாரூர் விற்பனைக் குழுச் செயலர் பி. காசிஅய்யன், வேளாண் வணிகத் துறை வேளாண்மை அலுவலர் ஆர். சாமிநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், மன்னார்குடி ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் உளுந்துப் பயறு வகைகளை விவசாயிகள் விற்பனை செய்யவும், வணிகர்கள் கொள்முதல் செய்யவும் வாரந்தோறும் புதன்,வியாழக்கிழமைகளில் ஏலம் நடத்த முடிவு செய்யப்பட்டது.

மேலும் பயிறு வகைகளுக்கு அரசே விலை நிர்ணயம் செய்வதுடன் அரசின் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு விவசாயிகளால் கொண்டு வரப்படும் அனைத்து பயறு வகைகளுக்கும் அரசுப் பேருந்துகளில் சுமைக் கட்டணம் இலவசமாக வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை விவசாயிகள் வலியுறுத்தினர். இதில் திருவாரூர்,மன்னார்குடி, வடுவூர், திருத்துறைப்பூண்டி பகுதி ஒழுங்கு முறை விற்பனைக் கூடக் கண்காணிப்பாளர்கள், மேற்பார்வையாளர்கள்,வேளாண் வணிக உதவி அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**போச்சம்பள்ளியில் குடிநீர் விநியோகம் செய்ய கிராம மக்கள் வலியுறுத்தல்**

First Published : 29 Mar 2010 05:45:34 AM IST

போச்சம்பள்ளி, மார்ச் 28: போச்சம்பள்ளி கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் உடனடியாக குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என கிராம மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் கூறியிருப்பது: இத்திட்டத்தின் கீழ் கடந்த 7 நாள்களாக குடிநீர் விநியோகம் செய்யாததால், 40-க்கும் மேற்பட்ட கிராம மக்கள் அவதிக்குள்ளாகி உள்ளனர். பங்குனி உத்திர திருவிழா நடைபெறும் இந்நேரத்தில், மக்கள் பயன்பாட்டுக்காக குடிநீர் வழங்க வேண்டும்.

இதுதொடர்பாக மாவட்ட நிர்வாகமும், குடிநீர் வடிகால் வாரியமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

**பெரியாறு, வைகை அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை**

First Published : 29 Mar 2010 04:18:12 AM IST

கம்பம், மார்ச் 28: பெரியாறு, வைகை ஆகிய அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்தது.

சனிக்கிழமை மாலை, இரவு நேரங்களில் அணைகளின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில், பெரியாறு -2 மி.மீ., தேக்கடி 4 மி.மீ., வைகை 22 மி.மீ., மஞ்சளாறு 16 மி.மீ. மழை பதிவாகி உள்ளதாக பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.
தற்போது பெரியாறு அணையிலிருந்து தமிழகத்துக்கு குடிநீருக்காக திறந்துவிடப்படும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. அணையின் நீர் இருப்பு 693 மில்லியன் கன அடியாக உள்ளது.
வைகை அணையில் நீர்மட்டம் 34.6 அடியாக உள்ளது. அணைக்கு நீர்வரத்து இல்லை. அணையிலிருந்து மதுரை குடிநீருக்காக 45 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 555 மில்லியன் கன அடியாக உள்ளது.

**நபார்டு வங்கி உதவியுடன் குளம் சீரமைப்புப் பணி தொடக்கம்**

First Published : 29 Mar 2010 12:21:17 AM IST

உளுந்தூர்பேட்டை, மார்ச் 28: நபார்டு வங்கி உதவியுடன் ஸ்டார் தொண்டு நிறுவனம் இணைந்து உளுந்தூர்பேட்டை வட்டம் மதியனூர் கிராமத்தில் நீர் செரிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், மக்கள் பங்கேற்புடன் திருக்குளம் சீரமைக்கும் பணி வியாழக்கிழமை நடைபெற்றது.

இப் பணியை விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் இரா.பழனிசாமி பங்கேற்று தொடங்கிவைத்தார். நபார்டு வங்கியின் விழுப்புரம் உதவி பொது மேலாளர் உமாமகேஸ்வரராவ், வேளாண்மை இணை இயக்குநர் கே.ராமலிங்கம் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழாவிற்கு ஊராட்சித் தலைவர் க.கலைச்செல்வி தலைமை வகித்தார். உளுந்தூர்பேட்டை வருவாய் வட்டாட்சியர் எஸ்.சிவஞானம், வட்டார வளர்ச்சி அலுவலர் எஸ்.தினகர் ஜான்சன் பாபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் கிராம மக்கள் சுமார் 500-க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, குளத்தை சீரமைக்கும் பணியை செய்து வருகின்றனர்.

**அரூரில் வாரந்தோறும் மஞ்சள் ஏலம்**

First Published : 29 Mar 2010 05:46:52 AM IST

அரூர், மார்ச் 28: அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் வெள்ளிக்கிழமை தோறும் மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது என சங்கத்தின் தனி அலுவலர் கூறியுள்ளார்.

இதுகுறித்து சனிக்கிழமை அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பது:

அரூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைகளில் மஞ்சள் ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்தில் சேலம், ஈரோடு, கோவை, ராசிபுரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்கின்றனர்.

இம்மாதம் 26-ம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 500-க்கும் அதிகமான மஞ்சள் மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. விரலி மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.13,469-ம், கிழங்கு மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.12,950 என விலை போனது.

சங்க வளாகத்தில் மஞ்சள் மூட்டைகளைப் பாதுகாக்கத் தேவையான கிடங்கு வசதியும், மஞ்சள் தூய்மை செய்வதற்கான சல்லடை வசதியும் உள்ளன என கூறியுள்ளார்.

**தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி குறித்த பயிற்சி**

First Published : 29 Mar 2010 05:29:24 AM IST

நாகர்கோவில், மார்ச் 28:கன்னியாகுமரி மாவட்டத்தில் தோட்டக் கலைப் பயிர்கள் சாகுபடி செய்வது குறித்த பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இது தொடர்பாக மாவட்ட தோட்டக் கலை துணை இயக்குநர் அ. பிரான்சிஸ் வேதமாணிக்கம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

2009-10 நிதியாண்டில் தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டத்தின்கீழ் ஆயிரம் விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க ரூ.15 லட்சம் நிதி ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. இத் திட்டத்தில் விவசாயிகளுக்கு கோவை வேளாண்மை பல்கலைக்கழகம், ஸ்பிக் அக்ரோ சென்டர், ஜெயின் இரிகேஷன் சிஸ்டம்ஸ் நிறுவனம் மற்றும் கொடைக்கானல் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம், அரசு தோட்டக்கலைப் பண்ணைகளிலும் தோட்டக்கலை பயிர்கள் சாகுபடி தொடர்பாக பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

இத் திட்டத்தில் பயிற்சி பெற விரும்பும் விவசாயிகள் தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடி செய்பவராகவும், புதிய தொழில்நுட்பங்களை தெரிந்து கொள்வதில் ஆர்வம் உள்ளவராகவும் இருக்க வேண்டும். பயன்பெற விரும்புவோர் தங்கள் நில உடைமை ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்திலுள்ள தோட்டக் கலை உதவி இயக்குநர்களை அணுகி பயன்பெறலாம் என்றார் அவர்.

**கல்லிடைக்குறிச்சியில் மரக்கன்றுகள் நடும் விழா**

First Published : 29 Mar 2010 05:21:35 AM IST

அம்பாசமுத்திரம், மார்ச் 28: கல்லிடைக்குறிச்சியில் சனிக்கிழமை சாலையோரம் மரக் கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

பொதுமக்களிடையே சுற்றுச்சூழல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கல்லிடைக்குறிச்சியில் பிரதான சாலையில் ட்ரி அறக்கட்டளை, திண்டுக்கல் பசுமை அறக்கட்டளை சார்பில் காமராஜர், ராஜாஜி, டெண்டுல்கர், ஏ.ஆர். ரஹ்மான், ஒபாமா, பிரதமர் மன்மோகன்சிங், முதல்வர் கருணாநிதி, முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா, காரல் மார்க்ஸ், லெனின், சிவாஜி, விவேகானந்தர் உள்ளிட்ட தலைவர்கள் பெயரில் 20 மரக் கன்றுகள் நடப்பட்டன.

திலகர் வித்யாலய மேல்நிலைப் பள்ளிச் செயலர் கே.எஸ். சங்கரசுப்பிரமணியன் தலைமை வகித்து மரக் கன்று நடுவதை தொடங்கிவைத்தார். பேரூராட்சித் தலைவர் க. இசக்கிபாண்டியன், துணைத் தலைவர் வே. சுப்பிரமணியன், கே.எம். அபுபக்கர் உள்ளிட்டோர் மரக்கன்றுகள் நட்டனர்.

இதில் பேராசிரியர் சு. விஸ்வநாதன், வழக்கறிஞர் கே.எஸ்.எஸ். கார்த்திக், கே.ஏ, அனிபா, ஆழ்வார்குறிச்சி பரமகல்யாணி கல்லூரி மாணவர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினமலர்

**வேளாண் பல்கலையில் ஒரு மணி நேரம் 'எர்த் ஹவர்'**

கோவை : புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் நோக்கில், கோவை வேளாண் பல்கலையில் ஒரு மணி நேரம் விளக்குகள் அணைக்கப்பட்டு 'எர்த் ஹவர்' கடை பிடிக்கப்பட்டது.
புவி வெப்பமடைதல் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்தும் வகையில் ஆஸ்திரேலியா நாட்டில் செயல்படும் இயற்கை பாதுகாப்பு செயல்களுக்கு நிதி வழங்கும் நிறுவனம் (ஙிஙிஊ) மற்றும் சிட்னி மார்னிங் பத்திரிக்கை ஆகியவை இணைந்து கடந்த 2007ம் ஆண்டு மார்ச் 31ல் சிட்னி மாநகரில் 'எர்த் ஹவர்' நிகழ்ச்சியை நடத்தின. அன்றைய தினம் இரவு 7.30 மணி முதல் 8.30 மணி வரை ஒரு மணி நேரம் 22 லட்சம் மக்கள் தங்களின் வீடுகளிலுள்ள மின் விளக்குகளை அணைத்து ஆதரவு தெரிவித்தனர். 2008 மற்றும் 2009ம் ஆண்டுகளில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்தாண்டும் மார்ச் 27 அன்று இரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரை மின் விளக்குகள் அணைக்கப்பட்டன.
இதற்கான விழிப்புணர்வு முகாம், தமிழ்நாடு வேளாண் பல்கலை சார்பில் கோவையில் கடந்த ஒரு வாரமாக நடந்தது. மார்ச் 22 உலக தண்ணீர் தினத்தன்று கங்கா மருத்துவமனை முன் 'சிறுதுளி' அமைப்பு சார்பில் அமைக்கப்பட்ட தண்ணீர்ப் பந்தலில் தமிழ்நாடு வேளாண் பல்கலை மாணவர்கள் பங்கேற்றனர்.
மார்ச் 24ல் பல்கலை வளாகத்திலுள்ள துவக்கப்பள்ளியில் 'கிரீன் விங்ஸ்' மாணவர் அமைப்பின் மூலம் பள்ளி மாணவர்களுக்கு புவி வெப்பமயமாதல் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது. மாணவர்களுக்கு செயல்முறைகளுடன் விளக்கம் அளிக்கப்பட்டது. சிறந்த அரங்கு அமைத்தவர்களுக்கு பரிசு வழங்கப்பட்டது.
மார்ச் 25ம் தேதி மாலை 6.00 மணியளவில் உலக வெப்பமயமாதலை கட்டுப்படுத்துவோம் என உறுதியளிப்பதன் ஒரு பகுதியாக நடந்த நிகழ்ச்சியில் பல்கலை துணை வேந்தர் முருகேசபூபதி, பதிவாளர் சுப்பையன் மற்றும் வேளாண் கல்லூரி முதல்வர் ஜெயபால் ஆகியோர் பங்கேற்றனர்.
வேளாண் பல்கலையில் மார்ச் 27 இரவு 8.30 மணி முதல் 9.30 மணி வரை அனைத்து மின்விளக்குகளும் அணைக்கப்பட்டன. வேளாண் பல்கலை பேராசிரியர்கள், ஓசை, சிறுதுளி, ராக் உள்ளிட்ட தனியார் சுற்றுச்சூழல் பாதுகாப்பு அமைப்பு பிரதிநிதிகள் பலர்
இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.
விளக்குகள் அணைக்கப்பட்ட ஒரு மணி நேரம் இசை நிகழ்ச்சி நடந்தது. மாணவர்கள் அகல் விளக்குகளை கொண்டு "எர்த் ஹவர்' என்று அமைத்தனர். முடிவில், பங்கேற்ற அனைவரும் சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

**எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நிர்வாக தவறுகள் தடுக்கப்பட்டுள்ளது : ஆட்சியர் அசிமா மரியம் தகவல்**

சேத்தியாத்தோப்பு : விவசாயிகளிடம் பணம் வாங்குவதை வாடிக்கையாக கொண்டுள்ள கரும்பு அதிகாரிகள் ஒரே அலுவலகத்தில் தொடர்ந்து பணியாற்றுவதை தடுக்க வேண் டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.
சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலையில் கரும்பு விவசாயிகள் குறை கேட்பு கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஆட்சியர் அசிமா மரியம் தலைமை தாங்கினார். தலைமை கரும்பு அலுவலர் (பொறுப்பு) ராஜதுரை முன் னிலை வகித்தார். கூட்டத்தில் பல்வேறு கரும்பு விவசாயிகள் சங் கங்களை சேர்ந்த நிர்வாகிகளான ராமானுஜம், வேல் முருகன், அப்பாதுரை, குஞ்சிதபாதம், இளவரசன், ஆதிமூலம், பன்னீர் செல்வம், குணசேகரன், ராமசாமி, பாபு, செந்தில் உட்பட பலர் பேசினர்.

அப்போது, விவசாயிகளிடம் பணம் வாங்கும் நோக்கத்தில் கரும்பு அலுவலர்கள் தொடர்ந்து ஒரே கோட்டத்தில் பணியாற்றி வருவதால், விவசாயிகள் அவதிப்பட்டு வருகின்றனர். இதற்கு பயந்தே பல விவசாயிகள் கரும்பு பயிரிடுவதையே விட்டுவிட்டனர். இந்த நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். கரும்பு விதைக் கரணையை சலுகை விலையில் வழங்க வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு அரை கிலோ வீதம் சர்க்கரை வழங்க வேண்டும். கரும்பு வெட்டி அனுப் பிய ஒரு வாரத்திற்குள் பணத்தை வழங்க வேண் டும். சர்க்கரை கட்டுமானத்தை அதிகரிக்க ரசாயன துறையில் உரிய கண்காணிப்புகளை மேற்கொள்ள வேண்டும் என பேசினர்.
விவசாயிகளின் கோரிக் கைகளுக்கு ஆட்சியர் ஆசியா மரியம் பதிலளிக்கையில், ஆலையில் இதுவரை நடந்த பல தவறுகள் தடுக்கப்பட்டுள்ளது. விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகள் கடந்த ஒரு மாதத்தில் உடனுக்குடன் தீர்வு காணப் பட்டுள்ளது. இனிவரும் நாட்களில் ஆலையின் நிர் வாக ரீதியிலான அனைத்து பிரச்னைகளையும் உடனுக்குடன் தீர்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சர்க் கரை துறை ஆணையம் மற்றும் அரசு மூலம் தீர்வுகான வேண்டிய பிரச்னைகளை தனிக் கவனம் செலுத்தி அவற்றை விரைவாக முடிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதுவரை கரும்புத் துறை, கணக்குத்துறை, ரசாயன துறை, பொறியியல் துறை என தனித்து இயங்கியவர்களை ஒருங் கிணைத்து செயலாற்ற நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது. கரும்பு உற்பத்தியை அதிகரிக்க விவசாயிகளுக்கு விழிப்புணர்வு கூட்டம், கருத்தரங்கு நடத்தப்பட உள்ளது என்றார். அலுவலக மேலாளர் நாராயணசாமி நன்றி கூறினார்.

**விவசாய தொழிலாளர் சங்கம் சூரக்குப்பத்தில் துவக்கம்**

பண்ருட்டி : பண்ருட்டி அடுத்த சூரக்குப்பத்தில் அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்க  கிளை துவக்க கூட்டம் நடந்தது.
கணேசன் தலைமை தாங்கினார். வட்ட தலைவர் உத்திராபதி, செயலாளர் ஏழுமலை முன் னிலை வகித்தனர்.  கூட் டத்தில் புதிய தலைவராக கணேசன், செயலாளராக ராஜேந்திரன், பொரு ளாளராக ஏழுமலை, துணை தலைவர்களாக பெருமாள், அண்ணாதுரை, துணை செயலா ளர்களாக வெங்கடேசன், சேகர் மற்றும் தர்மலிங் கம், தவிடன், சின்னதம்பி தேர்வு செய்யப்பட்டனர். நத்தம் புறம்போக்கு இடத்தில் குடியிருப்பவர் களுக்கு பட்டா வழங்க வேண்டும். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ளவர்களை ஆய்வு செய்து சேர்க்க வேண்டும், சூரக் குப்பம் சாலையை விரைந்து சீரமைக்க வேண்டும் என்பது உள் ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**மழையில்லாததால் நத்தத்தில் மா பிஞ்சுகள் வெம்பியது : தொடரும் அவலத்தால் விவசாயிகள் கண்ணீர்**

திண்டுக்கல் : மழையில்லாமல் கொளுத்தும் வெயிலால் நத்தத்தில் மா பிஞ்சுகள் உதிர்ந்து விழுந்து கருகி வருகின்றன. திண்டுக்கல் மாவட்டத்தில் சராசரி மழையளவு 830 மி.மீ.,யாகும். இந் தாண்டு மழை 600 மி.மீ.,க்கும் குறைவாகவே பெய்தது. இதனால் அனைத்து குளங்களும், கண்மாய்களும் வறண்டு கிடக்கிறது.  எப்போதும் நல்ல மழை பெய்யும் நத்தம் பகுதியில் இந்தாண்டு 30 மி.மீ., தான் மழை பெய்துள்ளது. கடந்தாண்டு இதே நேரத்தில் கோடை மழை பெய்து, நத்தத்தில் குளங்கள், கண் மாய்களில் தண்ணீர் இருந்தது. இந்தாண்டு சுத்தமாக மழை பெய்யவில்லை.
கருகும் மா பிஞ்சுகள்: நத்தம் சுற்றுப்பகுதியில் ஏராளமான ஏக்கரில் மா மரங்கள் பயிரிடப்பட்டுள் ளது. பிப்ரவரி, மார்ச் மாதத்தில் பூக்கத் துவங்கி, ஏப்ரல், மே மாதத் தில் காய்க்க துவங்கிவிடும்.  மழையில்லாததால் மா பிஞ்சுகள் அனைத் தும் தற்போது அடிக்கும் வெயிலை தாங்க முடியாமல் வெம்பி உதிர்கிறது.
விவசாயிகள் கண்ணீர்: நத்தம் பகுதியில் கருகும் மா மரங்களை காப் பாற்ற கிணற்று நீரை பாய்ச்ச விவசாயிகள் முடிவு செய்தாலும்,
கிணறுகளில் நீர்மட்டம் வெகுவாக குறைந்து விட்டதோடு,மின் தடை காரணமாக மா மரங்களுக்கு போதியளவு தண் ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் திணறி வருகின்றனர்.  எப்போதுமே மா சீசனில் நல்ல லாபம் பார்க்கும்

விவசாயிகள் இந் தாண்டு கடுமையான வறட்சியால் லாபம் ஈட்ட முடியுமா என்ற நிலையில் கண்ணீர் விடும் நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

**விவசாயிகள் சங்க பொதுக்கூட்டம்**

அறந்தாங்கி:அறந்தாங்கியை அடுத்த அத்தாணியில் தமிழக விவசாயிகள் சங்க பொதுக்கூட்டம் நடந்தது.கூட்டத்திற்கு தஞ்சாவூர் மாவட்ட விவசாயிகள் சங்க தலைவர் செல்லையா தலைமை வகித்தார். மாவட்ட கல்லணை கால்வாய் விவசாயிகள் பாசனதாரர்கள் சங்கத் தலைவர் ராமசாமி வரவேற்றார்.இடையாத்திமங்கலம் பாண்டியராமன்,நிலையூர் சரவணன்,திருவப்பாடி கணேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் மாநில விவசாயிகள் சங்கத் தலைவர் ரெத்தினசாமி,மாநில பொதுசெயலாளர் வரதராஜன்,கொள்கைபரப்பு செயலாளர் ராஜமாணிக்கம்,மாநில அமைப்பு செயலாளர் வாசுதேவன்,திருச்சி மாவட்ட துணைசெயலாளர் ஜெகதீஸ் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில் புகையான் நோய் தாக்குதலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 20 ஆயிரம் வழங்ககோரியும், நெல் குவிண்டாலுக்கு 1500 வழங்ககோரியும், கரும்பு டன் ஒன்றுக்கு 2500 வழங்ககோரியும், அரசு அதிகாரிகளுக்கு பென்ஷன் வழங்குவதை போல விவசாயிகளுக்கும் பென்ஷன் வழங்குவது உள்ளிட்ட முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் பிராமணவயல் ரெத்தினம், அத்தாணி முத்துராமலிங்கம்,ராசேந்திரன்,ஊராட்சி தலைவர்கள் தர்மவீரன், சேசையா,ஒல்லனூர் வைத்திலிங்கம், திருவப்பாடி கணேசன், சிவனேஷ், மற்றும் கட்டுமாவடி, பில்லங்குடி, பேட்டிவயல், சிங்கவனம்,நெமலிக்காடு,கலக்கமங்கலம்,தோப்புவயல்,கண்டிச்சங்காடு, கம்பர்கோவில், ஆடலை, ஏகப்பெருமாளூர், இடையாத்தூர்,சந்தமனை உள்ளிட்ட பல்வேறு கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர். கம்பர்கோவில் அய்யப்பன் நன்றி கூறினார்.

**பறவைகள் சரணாலயமாக மூக்கனேரியை மாற்ற முயற்சி: மாவட்ட கலெக்டர் அறிவிப்பு**

சேலம்: "சேலம் மூக்கனேரியை பறவைகள் சரணாலயமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என, கலெக்டர் சந்திரகுமார் தெரிவித்தார். சேலம் மக்கள் இயக்கம், மாவட்ட நிர்வாகம் இணைந்து கன்னங்குறிச்சி மூக்கனேரியை தூர்வாரி, பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றும் பணியை மேற்கொண்டன. இப்பணியை கலெக்டர் சந்திரகுமார் துவக்கி வைத்து கூறியதாவது:சேலம் மூக்கனேரி 58 ஏக்கர் பரப்பளவில் உள்ளது. ஏரியின் கரை 1,250 மீட்டர் நீளமுடையது. மாநகரத்தை ஒட்டிய பகுதியில் மூக்கனேரி அமைந்துள்ளதால், இதை சுற்றுலா தலமாக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏரியில் தண்ணீர் தேக்கி, மணல் திட்டுகள் அமைத்து பறவைகள் சரணாலயமாக மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஏரியை சுற்றிலும், மணல் திட்டுகளில் பறவைகள் வந்து தங்கி செல்ல ஏற்றார் போல 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படும். பொதுப்பணித்துறை சார்பில் விரைவில் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது. மக்கள் இயக்கம், சோனா கல்லூரி, கோல்டன் கேட்ஸ் பள்ளி மாணவ, மாணவியர் பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ளனர். ஏரியை தூர்வாரி தண்ணீர் தேங்க வைத்து, சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும். அதேபோல, சேலத்தில் உள்ள பிற ஏரிகளையும் தூர் வாரி கழிவுகளை அகற்றும் பணி மேற்கொள்ளப்படும்.இவ்வாறு அவர் கூறினார்.

**ஆத்தூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் ஆய்வு**

ஆத்தூர்: ஆத்தூர் பகுதி பால் கூட்டுறவு சங்கத்தில் பால் அளவை, பதிவேடு ஆவணங்கள் பராமரிப்பு சரியாக உள்ளதா என சேலம் ஆவின் பொது மேலாளர் ராஜரத்தினம் தலைமையில் அதிகாரிகள் நேற்று காலை ஆய்வு பணி மேற்கொண்டனர். ஆத்தூர் அருகே அம்மம்பாளையம், காந்திபுரம், காட்டுக்கோட்டை, தலைவாசல் உள்ளிட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பால் அளவு குறித்து நேரடி ஆய்வு செய்தனர். பால் அளவு குறித்த பதிவேடு, பால் கொழுப்பு சத்து குறித்து கேட்டறிந்தனர்.

பால் உற்பத்திக்கு பயன்படுத்தும் 'அசோலா' தீவன பாசி உற்பத்தி செய்யும் முறை, விவசாயிகளிடம் வரவேற்பு குறித்து கேட்டறிந்து விழிப்புணர்வு வழங்கினர். மேலும், அம்மம்பாளையம் பால் குளிரூட்டும் நிலையத்தில் பராமரிப்பு பணிகள், பால் அளவைகள் குறித்து ஆய்வு செய்தனர்.

இது குறித்து சேலம் ஆவின் பொதுமேலாளர் ராஜரத்தினம் கூறியதாவது:
சேலம் மாவட்டம் முழுவதும் 1,085 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் உள்ளது. அதன்மூலம் நாள்தோறும் 4.50 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. மக்கள் மத்தியில் ஆவின் தரமானது என்பதால், நல்ல வரவேற்பு உள்ளது. ஆத்தூர் வட்டாரம் பால் உற்பத்தியில் முதலிடத்தில் உள்ளது.தற்போது சராசரியாக 3.90 லட்சம் லிட்டர் உற்பத்தி உள்ளது. அம்மம்பாளையம் பால் குளிரூட்டும் நிலையத்தில் முறைகேடு நடப்பதாக விவசாயிகள் போராட்டம் செய்தனர். அதைதொடர்ந்து பால் குளிரூட்டும் நிலையத்தில் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ள தனிக்குழு அமைக்கப்பட்டு ஆய்வு நடந்து வருகிறது. பால் உற்பத்திக்கு தற்போது அசோலா எனும் தீவன பாசி பயன்படுத்தப்படுகிறது. தீவன பாசியை 300 கிராம் அளவுக்கு கறவை மாடுக்கு கொடுத்தால், நான்கு லிட்டர் பால் கறக்கும் மாடு கூடுதலாக ஒரு லிட்டர் பால் கறக்கிறது. கறவை மாடும் ஆரோக்கியமாகவும், ஊட்டமாகவும் இருக்கும். ஆவின் நிறுவனத்துக்கு பால் விற்பனை செய்யும் வகையில் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.ஆய்வின்போது உதவி பொதுமேலாளர் சண்முகம் உள்பட பலர் உடனிருந்தனர்.

**விவசாய பட்டதாரிகள் சங்க செயற்குழு கூட்டம்**

சிவகங்கை : "விவசாய துறையில், 509 உதவி இயக்குனர் பணியிடங்களை, வரன்முறை செய்யவேண்டும்," என விவசாயத்துறை பட்டதாரிகள் சங்க மாநில தலைவர் நெப்போலியன் கூறினார். சங்க மாநில செயற்குழு கூட்டம், சிவகங்கையில் நடந்தது. மாவட்ட தலைவர் தவசிமுத்து தலைமை வகித்தார். விவசாய, விற்பனை குழு வாரிய தலைவர் கணேசன் பேசினார்.
மாநில தலைவர் கூறுகையில், " விவசாய துறையில் 124 பேருக்கு துணை இயக்குனர் பதவி உயர்வு அளித்த அரசுக்கு நன்றி. விவசாய பொறியியல் பிரிவு கண்காணிப்பு பொறியாளருக்கு இணையாக, விவசாய இணை இயக்குனர்களுக்கு சம்பளம் வழங்க வேண்டும். கடந்த 2009 க்கு பின் பணியில் சேர்ந்த விவசாய அலுவலரின், சம்பள முரண்பாடு களைய வேண்டும். மேலும், 509 விவசாய உதவி இயக்குனர் பணியிடங்களை வரன்முறை செய்யவேண்டும். பட்ஜெட்டில், விவசாய கடனுக்கு 2,500 கோடி ரூபாயை, அரசு ஒதுக்கியுள்ளது. இது விவசாய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கும்," என்றார்.
மாநில செயலாளர் சுரேஷ், பொருளாளர் இளங்கோவன், இணை செயலாளர்கள் சுரேஷ், அய்யம்பெருமாள், ராகவேந்திரராவ், மாவட்ட பொருளாளர் தனபாலன், நிர்வாகிகள் வெங்கடேஷ்வரன், இளங்கோ, நடராஜன் பங்கேற்றனர். மாவட்ட செயலாளர் முருகபாரதி நன்றி கூறினார்.

---

**பால்கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க உற்பத்தியாளர்கள் கோரிக்கை**

தஞ்சாவூர்: தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியத்தின் நிர்வாக குழு கூட்டம் மாவட்ட தலைவர் காசிநாதன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: பால் உற்பத்தியாளர்கள் மற்றும் பணியாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி தஞ்சாவூர் பால் கூட்டுறவு ஒன்றிய அலுவலகம் முன் (ஆவின்) ஆர்ப்பாட்டம் செய்வது.இந்தாண்டு கால்நடை தீவணங்கள் விலையும், கறவை மாடுகளின் விலையும் உயர்ந்துள்ள நிலையில் தற்போதுள்ள பால் கொள்முதல் விலை எந்தவிதத்தில் கட்டுப்படியாகவில்லை.

எனவே தமிழக அரசு பால்கொள்முதல் விலையை பசும்பாலுக்கு லிட்டருக்கு ஐந்து ரூபாயும், எருமைப்பாலுக்கு லிட்டருக்கு எட்டு ரூபாயும் விலை உயர்த்தி வழங்க வேண்டும். தற்போது செயல்படக்கூடிய பல கூட்டுறவு சங்கங்கள் நசிந்து மூழ்கிவிடும் நிலையில் உள்ளது. இதர துறைகளுக்கு அரசு மானியம் வழங்குவது போல் கூட்டுறவு சங்கங்களில் கொள்முதல் செய்யபடும் பாலுக்கு லிட்டருக்கு இரண்டு ரூபாய் மானியம் வழங்க வேண்டும். ஆரம்ப கூட்டுறவு சங்க பணியாளர்கள் மற்ற எந்த துறையையும் விட குறைந்த ஊதியத்தில் தினக் கூலிகளாக உள்ளனர். சமீபத்தில் தமிழக அரசு வெளியிட்டிருக்கக்கூடிய ஊதிய உயர்வு உத்தரவு இவர்களுக்கு பெருத்த ஏமாற்றமளிக்கிறது. அரசு உடனடியாக இந்த ஆரம்ப சங்க பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து ஊதிய உயர்வு வழங்க வேண்டும்.

மத்திய அரசின் பால்பெருக்குத் திட்டத்தின் உதவியோடு தமிழகத்தில் அண்ணா நூற்றாண்டு விழா மகளிர் பால்பெருக்கத் திட்டத்தின் கிழ் தஞ்சாவூர் பால் கூட்டுறவு ஒன்றியத்தின் மூலம் 25 ஆரம்ப சங்கங்களுக்கு அமல்படுத்த அரசு அறிவித்தது. ஆனால் இத்திட்டம் ஒரு இடத்தில் கூட முறையாக அமல்படுத்தாமல் பாதியில் நிற்கிறது. இத்திட்டத்தை அரசு உடனடியாக செயல்படுத்திட வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநில தலைவர் முகமது அலி, சாமி நடராஜன், துரைராஜ், ரெத்தினம், துரைச்சாமி ஆகியோர் பங்கேற்றனர்.

**2 ஆயிரம் வாழைகள் வெட்டி சாய்ப்பு**

ஸ்ரீவைகுண்டம் : ஆழ்வார்திருநகரி அருகே முன்விரோதம் காரணமாக 2 ஆயிரம் வாழைகள் வெட்டி சாய்க்கப்பட்டது. இதனால் ஆழ்வை பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது.
நவலட்சுமிபுரம் சுப்பையா மகன் தர்மராஜ்(56). இவருக்கு சொந்தமான வாழைத்தோட்டம் மளவைசாலையில் உள்ளது. இவருக்கும், அதே ஊரைச் சேர்ந்த அந்தோணிமுத்து மகன் சந்தியப்பன்(45) குடும்பத்திற்கும் முன்விரோதம் இருந்து வந்ததால் அதிகாலை 3 மணிக்கு சந்தியப்பன், அந்தோணிமுத்து மகன் பிச்சையா(40), பிச்சையா மகன் முத்து(25) கோபாலகிருஷ்ணன் மகன்கள் சங்கர்(35), மாரிமுத்து(34), செல்வராஜ் மகன் தங்கம்(37) ஆகியோர் தர்மராஜ் தோட்டத்தில் உள்ள வாழைகளை வெட்டி சாய்த்தனர். இதில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாழைகள் நாசமானது. இதுகுறித்து ஆழ்வை., போலீஸ் இன்ஸ்பெக்டர் குருவெங்கட்ராஜ் எஸ்.ஐ.,க்கள் நாராயணன், வேம்பன் மற்றும் போலீசார் விசாரித்து குற்றவாளிகளை தேடி வருகின்றனர்.

**கூட்டுறவு சங்க வாழைத்தார் ஏல மையம்:கடையநல்லூரில் துவக்கம்**

திருநெல்வேலி:தென்காசி, செங்கோட்டை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் கடையநல்லூரில் வாழைத்தார் ஏல மையம் துவக்கப்பட்டது.தென்காசி, கடையநல்லூர், இடைகால், நயினாரகரம், இலத்தூர், மாவடிக்கால் ஆகிய பகுதிகளில் வாழை சாகுபடி நடைபெற்று வருகிறது. இப்பகுதி வாழை சாகுபடியாளர்ளுக்கு உதவ தென்காசி, செங்கோட்டை தாலுகா வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் பல்வேறு உதவிகளை செய்து வருகிறது. வாழைத்தாருக்கு நல்ல விலை கிடைக்க வேண்டும் என்பதற்காக இந்த கூட்டுறவு சங்கம் வாழைத்தார் ஏலம் நடத்தி விவசாயிகளுக்கு நல்ல விலை பெற்று தருகிறது.

தென்காசியில் திங்கள் மற்றும் வெள்ளி கிழமைகளில் ஊராட்சி ஒன்றியம் அருகில் உள்ள கிட்டங்கியில் ஏலம் நடந்து வருகிறது. தற்போது கடையநல்லூரில் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் எதிரில் உள்ள இச்சங்கத்தின் ரைஸ்மில் வளாகத்தில் வாழைத்தார் ஏலம் துவக்கப்பட்டது. துணைப் பதிவாளர் வானதி குத்துவிளக்கேற்றி ஏலத்தை துவக்கி வைத்து பேசுகையில், "ஒவ்வொரு வியாழக் கிழமைகளிலும் இதே இடத்தில் வாழைத்தார் ஏலம் நடைபெறும். விவசாயிகள் அதிக அளவில் வாழைத்தார்களை கொண்டு வர வேண்டும்.

அவர்களுக்கு அதிக அளவு விலை கிடைக்க வேண்டும்" என்றார்.சங்க தனி அலுவலர் சாந்தி, கணக்கர் வேலுச்சாமி, காசாளர் சுப்புராஜ், எழுத்தர் மாரிமுத்து அழகுசுந்தரம் வரவேற்றனர். கூட்டுறவு சார்பதிவாளர்கள் ரமேஷ்குமார், கோமதிநாயகம், ராஜன், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலர் பேச்சிமுத்து, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஸ்டான்லி கலந்து கொண்டனர்.ஏற்பாடுகளை கூட்டுறவு விற்பனை சங்க ஊழியர்கள் செய்திருந்தனர்.

**வேளாண்மை பொறியியல் துறை மூலம் இயந்திரங்கள் வாடகைக்கு கிடைக்குது**

திருவண்ணாமலை: வேளாண்மை பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு விடப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.

இது குறித்து கலெக்டர் ராஜேந்திரன் விடுத்துள்ள குறிப்பு:வேளாண்மைப்பொறியியல் துறை மூலம் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் விவசாயிகளின் உபயோகத்திற்காக வாடகைக்கு விடப்படுகிறது. ஒரு மணி நேரத்திற்கு டீசல் உட்பட டிராக்டருக்கு ரூ.275. புல்டோசர் இயந்திரத்திற்கு ரூ. 700. நெல் அறுவடை இயந்திரத்திற்கு ரூ.795 ஆகும்.மேலும் பாறை தகர்க்கும் கருவி (கிணறு ஆழப்படுத்த) 20 குழிகள் போட்டு வெடிவைக்க ரூ.250. இதற்கான டீசல், வெடிமருந்து, போக்குவரத்து ஆகியவை மனுதாரரை சார்ந்தது மேலும் நான்கு நாட்களுக்கு உரிய தொகையாக ஆயிரம் ரூபாய் முன்பணமாக செலுத்த வேண்டும்.

வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகைக்கு பெற விரும்பும் திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு, போளூர் தாலுகா விவசாயிகள் 'உதவி செயற்பொறியாளர், எண்-1531, காஞ்சி ரோடு, திருவண்ணாமலை' என்ற முகவரியில் பணம் செலுத்தலாம். மேலும், ஆரணி, வந்தவாசி, செய்யாறு ஆகிய தாலுகாவில் உள்ள விவசாயிகள், 'உதவி செயற்பொறியாளர், 67- கார்த்திகேயன் சாலை ஆரணி' என்ற முகவரியில் பணம் செலுத்த வேண்டும். உதவி புவியிலாளர் மூலம் நீர் இருப்பு கண்டறிய விவசாயப்பணிக்கு ரூ.500ம், விவசாயமற்ற பணிக்கு ரூ. ஆயிரம் முன்பணமாக செலுத்த 'செயற்பொறியாளர், கலெக்டர் வளாகம், வேங்கிக்கால், திருவண்ணாமலை' என்ற முகவரியில் பணம் செலுத்தி பயன் அடையலாம்.இவ்வாறு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

**காய்கறி தோட்டம் அமைக்க களப்பணியாளர்களுக்கு உபகரணம்**

திருவாரூர்:திருவாரூர் மாவட்டத்தில் உள்ள அங்கன்வாடி மையங்களில் காய்கறி தோட்டம் அமைக்கும் களப்பணியாளர்களுக்கு கலெக்டர் சந்திரசேகரன் உபகரணங்களை வழங்கினார்.திருவாரூர் மாவட்டத்தில் 200 அங்கன்வாடி மையங்களில் காய்கறி தோட்டம் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதை ஒட்டி கலெக்டர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் இதற்கான பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை தொடக்கி வைத்து கலெக்டர் சந்திரசேகரன் பேசுகையில், குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்கும் வகையில் தான் இதுபோன்ற காய்கறி தோட்டங்கள் அமைக்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதில் தக்காளி, வெண்டைக்காய், கீரை உட்பட பல சத்தான காய்கறிகளை பயிரிட்டு குழந்தைகளுக்கு வழங்க வேண்டும் என்றார். பின்னர் காய்கறித் தோட்டம் அமைப்பது குறித்த

விளக்க கையேடு, உபகரணங்களை கலெக்டர் சந்திரசேகரன் பணியாளர்களுக்கு வழங்கினார். டி.ஆர்.ஓ., ஜான்லூயிஸ், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்ட அலுவலர் ஜெயராணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வேளாண்துறை பயிலரங்கம்**

திருக்கோவிலூர் : வேளாண்மைப் பொறியியல் துறை சார்பில் திருக்கோவிலூர் அணைக்கட்டுத் திட்ட பாசனப் பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மை திட்ட பயிலரங்கம் திருக் கோவிலூரில் நடந்தது.
பாசனப்பகுதி மேன்மை மற்றும் நீர் மேலாண்மைத் திட்ட செயற் பொறியாளர் பழனிச்சாமி தலைமை தாங்கினார். உதவி செயற் பொறியாளர் தனபால் வரவேற்றார். உதவி செயற்பொறியாளர் சவுந் தர்ராஜன் முன்னிலை வகித்தார். அணைக்கட்டு திட்டப் பாசன விவசாயிகள் மற்றும் ஏரிபாசன சங்க நிர்வாகிகள் கூட்டத்தில் கலந்து கொண்டனர். நெல், கரும்பு, சொட்டுநீர் பாசனம், சாண எரிவாயு குறித்து படக்காட்சிகள் மூலம் கோவை வேளாண் பல்கலைக் கழக பேரா சிரியர் புகழேந்தி விளக்க மளித்தார். அணைக்கட்டு திட்ட நீர்வள ஆதாரம் மற்றும் சிக்கன பயன்பாடு குறித்து எடுத்துரைக்கப் பட்டது. வேளாண்துறை, வேளாண் வணிகத்துறை சார்பில் அதிகாரிகள் நவீன விவசாயம் குறித்து பேசினர்.
உதவி பொறியாளர் நாகராஜன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கல்பட்டு பாசன சங்க தலைவர் கல்விராயன், பண்ணை மகளிர்குழுத் தலைவி விஜயகுமாரி பயிலரங்கத்தின் பயன்கள் குறித்து பேசினர். இள நிலை பெறியாளர் நெடு மாறன் நன்றி கூறினார்

**விவசாய விளை பொருட்களுக்கு காப்பீடு திட்டம் : இந்திய விவசாயிகள் சங்கம் கோரிக்கை**

திண்டிவனம் : விவசாய விளை பொருட்களுக்கும் காப்பீடு திட்டம் செயல்படுத்த வேண்டுமென்று, இந்திய விவசாயிகள் முன்னேற்ற சங்கம் கோரிக்கை வைத்துள்ளது.
இந்த சங்க பொதுக்குழு கூட் டம், திண்டிவனம் செஞ்சி ரோடில் உள்ள சங்க அலுவலகத்தில் நடந்தது. நிறுவனர் வக்கீல் வசந்தி தலைமை தாங்கினார். சங்கத் தலைவர் வக்கீல் முருகேசன் உட்பட பலர் பேசினர். சங்கத் தின் மாநில பொருளாளராக திண் டிவனம் ஏழுமலை, மாநில இணை செயலாளராக வானூர் அனந்தபத்மநாபன், திண்டிவனம் நகர செயலாளராக முன்னாள் கவுன்சிலர் ராஜேந்திரன் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டனர்.
கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீர்மானங்கள்: கரும்பு டன் ஒன்றுக்கு 2 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக அறிவித்த தமிழக முதல்வர் கருணாநிதிக்கு நன்றி தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதே போல் நெல்லுக்கு குவிண் டால் ஒன்றுக்கு 1,500 ரூபாய் என நிர்ணயம் செய்ய வேண்டும். திண்டிவனத்தில் மின்நகர் முதல் அவரப்பாக்கம் வரை 5 கி.மீ., தூரத்திற்கு தேவையில் லாத மற்றொரு புற வழிச்சாலை அமைப்பதை மத்திய அரசு கைவிட வேண்டும். இதனால் சிறு,குறு விவசாயிகள் 64 பேர் பாதிப்பது தடுக்கப்படும்.
விவசாய விளை பொருட்க ளான நெல்,வேர்கடலை போன்றவற்றிற்கும் கட் டாய காப்பீட்டு திட்டத்தை செயல்படுத்த வேண் டும். விவசாய குடும்பத்தைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கு மருத்துவம்,பொறியியல் மற்றும் தொழிற் கல்வியில் தனி இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். விவசாயிகளுக்கு வழக்கம் போல் கூட்டுறவு சங்கம் மூலம் பயிர் கடன் வழங்க வேண்டும். வட்டியில்லாத கடன் காலத்தை 6 மாதம் என்பதை ஒரு ஆண்டாக உயர்த்த வேண்டும் உள்ளிட்ட தீர் மானங்கள் நிறைவேற்றப் பட் டன. தலைமை நிலைய செயலா ளர் ஜானகிராமன் நன்றி கூறினார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## கேரளாவில் கறிக்கோழி விலை கடும் வீழ்ச்சி கிலோவுக்கு 40 ரூபாய் குறைந்தது

பெரும்பாவூர், மார்ச்.29–

கேரளாவில் கறிக்கோழி விலை கடும் வீழ்ச்சி அடைந்து உள்ளது. கிலோவுக்கு 40 ரூபாய் குறைந்து இருக்கிறது.

கறிக்கோழி ஏற்றுமதி

தமிழகத்தின் நாமக்கல், பல்லடம் பகுதிகளில் அதிக அளவில் கறிக்கோழிகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கு உற்பத்தி செய்யப்படும் கறிக்கோழிகள் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் மேலும் பக்கத்து மாநிலமான கேரளா, கர்நாடகா, ஆந்திரா போன்ற மாநிலங்களுக்கும் லாரிகளில் கொண்டு செல்லப்படுகி றது.

குறிப்பாக கேரள மாநிலத்தை சேர்ந்தவர்கள் பெரும்பாலானோர் கறிக்கோழிகளை விரும்பி சாப்பிடுகின்றனர். இதனால் கேரளாவில் கறிக்கோழி விற்பனை சக்கை போடு போடுகிறது. தமிழகத்தை காட்டிலும் இங்கு கிலோவுக்கு 20 ரூபாய், 30 ரூபாய் அதிகமாக கறிக்கோழிகள் விற்கப்படும். இந்த நிலையில் நேற்று கறிக்கோழி விலை கடும் வீழ்ச்சி அடைந்து உள்ளது.

ஒரு கிலோ கறிக்கோழி 55 ரூபாய்

எர்ணாகுளம் மாவட்டத்தில் கடந்த சில நாட்களுக்கு முன் ஒரு கிலோ கறிக்கோழி 90 ரூபாய், 95 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் நேற்று ஒரே நாளில் கிலோவுக்கு 40 ரூபாய் குறைந்து 55 ரூபாய்க்கு கறிக்கோழி விற்கப்பட்டது. கறிக்கோழி விலை குறைவுக்கு கிறிஸ்தவர்கள் ஈஸ்டர் பண்டிகையையொட்டி தவக்காலத்தை கடைப்பிடிப்பதே காரணம் என்று வியாபாரி ஒருவர் தெரிவித்தார்.

அதே நேரத்தில் முட்டை விலை அதிகரித்து உள்ளது. கடந்த சில நாட்களாக ஒரு முட்டை 2.80 ரூபாய்க்கு விற்றது. இப்போது ஒரு முட்டை 3 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

## தேயிலை கவாத்து மானியத்தை உயர்த்தி தர கோரிக்கை

குன்னூர், மார்ச்.29–

தேயிலை கவாத்து மானியத்தை உயர்த்தி தர வேண்டும் என்று பொரங்காடு சீமெ படுகர்சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேயிலை வாரியம்

பொரங்காடு சீமெ படுகர் சங்க தலைவர் ராஜேஸ் சந்தர் குன்னூரில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை தொழில் கடந்த 2000–ம் ஆண்டு முதல் 2008–ம் ஆண்டு வரை மோசமான நிலையில் இருந்தது. தேயிலை வாரியம் உபாசி அறிவியல் மையம் ஆகியவை எடுத்த நடவடிக்கை காரணமாக கடந்த 2 ஆண்டுகளாக விலை கிடைத்து வந்தது.

கடந்த 3 மாத காலமாக பச்சை தேயிலை விளைச்சல் இல்லை. தற்போது தேயிலை குறைந்த விலையில் விற்பனை யாவதோடு, தேயிலை தூள் தேக்கம் அடைந்து விடுகிறது. மழை பெய்து பச்சை தேயிலை மகசூல் அதிகரிக்கும்

வேளை யில் விலை இன்னும் குறை வடைய வாய்ப்பு உள்ளது இதனை தடுக்க ஆவன செய்ய தமிழக முதல்–அமைச்சருக்கும், தேயிலை வாரிய செயல் இயக்குனருக்கும் மனு அனுப்பி உள்ளோம்.

சிறு விவசாயிகள் தேயிலை தூளை தமிழகம் மட்டுமின்றி கர்நாடகா, ஆந்திரா போன்ற அண்டை மாநிலங்களிலும், ரேஷன் கடைகளில் விற்பனை செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

உயர்த்த வேண்டும்

தேயிலை வாரியத்தில் தேயிலை செடிகளை கவாத்து செய்ய 23 ஆயிரத்து 500 ரூபாய் மானியமாக வழங்கு கின்றனர். கூலி மற்றும் விலைவாசி உயர்வு காரண மாக கவாத்து மானியத்தை 37 ஆயிரத்து 500 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டும்.

தேயிலை வாரியத்தில் மானியம் வழங்க ½ ஏக்கர், 1 ஏக்கர் உள்ள விவசாயிகளிடம் பட்டா சிட்டா கேட்கின்ற னர். நீலகிரி மாவட்டத்தில் கூட்டு பட்டாவில் தான் நிலங்கள் உள்ளன. இவற்றிற்கு சிட்டா பட்டா பெற முடியாத நிலை உள்ளது. இந்த முறையை தேயிலை வாரியம் கைவிட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

பேட்டியின் போது சங்க பொது செயலாளர் சுப்பிரமணி உடனிருந்தார்.